Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 257 | உள்ளூர் - 14.09.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 257 | வெளியூர் - 15.09.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**தங்கம் வாங்க ஐதீக நேரம்?**

**SSC: 1,871 சார்பு ஆய்வாளர் பணியிடங்கள்!**

**திக்கெட்டும் விநாயகர் திருவிழா!**

**ஸ்டாலின் தலைமையில் மூன்றாவது அணி?**

## 2029-க்குள் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் - அமித் ஷா!





புதுடெல்லி, செப். 14–

2029ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பாக, என்டிஏ ஆட்சியிலுள்ள 21மாநிலங்களிலும் பொது சிவில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அமித் ஷா மும்பையில் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அமித் ஷா, “2014க்கு முன்னிருந்த ஊழல், வாரிசுஅரசியல் மற்றும்பலவீனமான பொருளாதார நிலையிலிருந்து விடுபட்டு, தற்போது இந்தியா உலகின் முதல் 5 பொருளாதார நாடுகளுக்குள் இணைந்துள்ளது. முதல் காலாண்டில் 7.8% ஜிடிபி வளர்ச்சியைப் பதிவு செய்து, சர்வதேச அளவில் முன்னணி பொருளாதார நாடுகளை இந்தியா வழிநடத்துகிறது.

‘ஆபரேஷன் சிந்தூர்’ மற்றும் எதிரிகளின் எல்லைக்குள் சென்று தாக்குவதன் மூலம் இந்தியா பயங்கரவாதத்திற்கு எதிராக பூஜ்ய சகிப்புத்தன்மை கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. நாட்டில் உள்ள சட்டவிரோத ஊடுருவல்காரர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டு நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்பதில் அரசு உறுதியாக உள்ளது.” என்று தெரிவித்தார்.

## திக்கெட்டும் விநாயகர் திருவிழா!



சென்னை, செப். 14–

விநாயகர் சதுர்த்தி விழா இன்று நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் பல்வேறு இந்து அமைப்புகள், இளைஞர் குழுக்கள் மற்றும் குடியிருப்புவாசிகள் பந்தல்கள் அமைத்து விநாயகர் சிலைகளை நிறுவியுள்ளனர். சிறப்பு பூஜைகள், வழிபாடுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் சுமார் 37 ஆயிரம் சிலைகளைப் பந்தல்களில் வைத்து வழிபட போலீஸார் அனுமதி வழங்கியுள்ளனர். இதில் சென்னையில் மட்டும் 1,562 சிலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான இடங்களில் நேற்று மாலையே சிலைகள் நிறுவப்பட்டு, விழாக்கோலம் பூண்டுள்ளன. பாதுகாப்புக்காக மாநிலம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சென்னையில் 16 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்கின்றனர். உளவுப்பிரிவு போலீஸாரும் ரகசியக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு பந்தலிலும் ஒரு காவலர், இரண்டு தன்னார்வலர்கள் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். கண்காணிப்பு கேமராக்கள் மூலமும் விழா நடைபெறும் பகுதிகள் கண்காணிக்கப்படுகின்றன.

சிலைகளின் உயரம் 10 அடிக்கு மிகாமல் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் சிலைகள் அமைப்பதைத் தவிர்க்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற வழிகாட்டுதல்கள், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விழாவை நடத்த வேண்டும். தீயணைப்புத் துறை, மாநகராட்சியின் தடையில்லாச் சான்றிதழ்களுடன் சிலைகளை நிறுவி வழிபடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிற மதத்தினரின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலோ, மதவெறுப்பைத் தூண்டும் வகையிலோ கோஷங்கள் எழுப்பக்கூடாது என்றும் போலீஸார் தெரிவித்துள்ளனர். இன்று முதல் சிறப்பு பூஜைகள் நடைபெற்று, செப்டம்பர் 19, 20 தேதிகளில் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நீர்நிலைகளில் கரைக்கப்பட உள்ளன.

சென்னையில் இந்து முன்னணி சார்பில் செப்டம்பர் 20–ம் தேதி ஊர்வலம் நடைபெறும் என அதன் மாநிலச் செய்தித் தொடர்பாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

தென் சென்னை சிலைகள் வள்ளுவர் கோட்டத்திலிருந்தும், மத்திய சென்னை சிலைகள் திருவல்லிக்கேணியிலிருந்தும், வட சென்னை சிலைகள் முத்துசாமி பாலத்திலிருந்தும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கடலில் கரைக்கப்படும் என்று அவர் கூறினார். சிலைகளைப் பாதுகாப்பான முறையில் கரைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## செங்கடலில் போர் பதற்றம் உச்சம்!

# சவூதியின் 1,200 கி.மீ. எண்ணெய் குழாய் மூடல்! உலக எண்ணெய் விநியோகத்திற்கு நெருக்கடி!

## கச்சா எண்ணெய் விலை எகிறுமா?



ரியாத், செப். 14–

செங்கடல் பகுதியில் ஹவுதி தாக்குதல் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில், சவூதி அரேபியாவின் முக்கியமான 1,200 கி.மீ. நீள கிழக்கு மேற்கு எண்ணெய் குழாய் இணைப்பு மூடப்பட்டிருப்பது உலக எரிசக்தி சந்தையில் புதிய பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சவூதியின் கிழக்குப் பகுதியில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெயை செங்கடல் துறைமுகப் பகுதிக்கு கொண்டு செல்லும் இந்த குழாய், ஹார்முஸ் ஜலசந்தியைத் தவிர்த்து எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கான முக்கிய மாற்றுப் பாதையாக கருதப்படுகிறது. இதன் செயல்பாடு பாதிக்கப்பட்டிருப்பதால் சர்வதேச சந்தைக்கான எண்ணெய் விநியோகத்தில் நெருக்கடி ஏற்படுமா என்ற கவலை எழுந்துள்ளது.

செங்கடல் மற்றும் அதனை ஒட்டிய கடல்வழிகளில் ஹவுதி தாக்குதல் அச்சம் நீடிப்பதால், எண்ணெய் மற்றும் சரக்குக் கப்பல்களின் பாதுகாப்பும் முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது. கப்பல்கள் மாற்றுப் பாதைகளை பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டால் பயண நேரம், காப்பீட்டுக் கட்டணம் மற்றும் சரக்குப் போக்குவரத்துச் செலவு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

ஏற்கனவே மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றத்தால் சர்வதேச கச்சா எண்ணெய் சந்தை அழுத்தத்தை சந்தித்து வருகிறது. இந்நிலையில் சவூதியின் முக்கிய எண்ணெய் போக்குவரத்து கட்டமைப்பிலும் பாதிப்பு ஏற்பட்டால், கச்சா எண்ணெய் விலை மேலும் உயரக்கூடும் என்ற அச்சம் சந்தையில் ஏற்பட்டுள்ளது.

இந்தியா தனது எரிபொருள் தேவையின் பெரும்பகுதியை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்வதால், உலக சந்தையில் எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்தால் இறக்குமதி செலவு அதிகரிக்கலாம். அதன் தாக்கம் பெட்ரோல், டீசல், போக்குவரத்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளிலும் எதிரொலிக்கும் அபாயம் உள்ளது.

செங்கடல் போர் பதற்றம் தற்போது உலக எண்ணெய் சந்தையின் அடுத்த பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது.

## $300 டிரில்லியன் ‘கடன் குண்டு’! சீட்டுக்கட்டாய் சரியுமா உலகப் பொருளாதாரம்?



புதுடெல்லி, செப். 14–

அமெரிக்கா, சீனா, பிரிட்டன் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் கடன் சுமை தொடர்ந்து அதிகரித்து வருவது உலகப் பொருளாதா ரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. உலகளாவிய மொத்தக் கடன் தற்போது சுமார் 300 டிரில்லியன் டாலராக உயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேநேரம் உலகின் மொத்த GDP சுமார் 123 டிரில்லியன் டாலர் அளவில் மட்டுமே இருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் கடன் மட்டும் சுமார் 40 டிரில்லியன் டாலராக உயர்ந்துள்ள நிலையில், அதன் பொருளாதார மதிப்பு சுமார் 32 டிரில்லியன் டாலர் என தெரிவிக்கப்படுகிறது. பல ஆண்டுகளாக அரசுகள் வளர்ச்சித் திட்டங்கள், உள்கட்டமைப்பு மற்றும் நலத்திட்டங்களுக்காக கடன் பத்திரங்கள் மூலம் தொடர்ந்து நிதி திரட்டி வந்ததே கடன் சுமை அதிகரிக்க முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

இப்போது கடனைத் திருப்பிச் செலுத்துவதைவிட, அதற்கான வட்டியை தொடர்ந்து செலுத்துவதும் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. கடன் நெருக்கடியை சமாளிக்க அதிகளவில் பணம் அச்சிட்டால் பணவீக்கம் உயரலாம். வரிகளை அதிகரித்தால் பொதுமக்கள் மீது கூடுதல் சுமை ஏற்படும். பழைய கடன் மற்றும் வட்டியைச் செலுத்த மீண்டும் கடன் வாங்கினால் கடன் சுழற்சி மேலும் தீவிரமடையும் அபாயமும் உள்ளது. இதற்கிடையே மத்திய கிழக்கு மற்றும் ஆசியாவில் நிலவும் போர் பதற்றம், நிதிச் சந்தைகளில் நிச்சயமற்ற தன்மையை அதிகரி த்துள்ளது. இதனால் முதலீட்டாளர்கள் பங்குகள் மற்றும் அரசு பத்திரங்களைவிட தங்கம், வெள்ளி போன்ற பாதுகாப்பான முதலீடுகளை நாடுவதாகக் கூறப்படுகிறது.

பெரும் பொருளாதார நாடு கடுமையான கடன் நெருக்கடியில் சிக்கினால், அதன் தாக்கம் மற்ற நாடுகளுக்கும் பரவி உலகப் பொருளாதாரத்தில் தொடர் அதிர்வை ஏற்படுத்துமா என்ற அச்சம் தற்போது அதிகரித்துள்ளது.

## US, UKவில் இருந்து பொட்டியை கட்டும் இந்தியர்கள்.. இனி சமாளிக்க முடியாது பாஸ்!



வாஷிங்டன், செப். 14–

வெளிநாட்டில் படித்து வேலை வாய்ப்பு பெற விரும்பும் இந்தியர்களுக்கு விசா நிபந்தனைகள் புதிய சவாலாக உருவெடுத்துள்ளன. பிரிட்டனின் சம்பளக் கட்டுப்பாடுகளும், அமெரிக்காவின் புதிய விசா விதி முன்மொழிவும் மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் எதிர்காலத் திட்டங்களைப் பாதிக்கக்கூடும்.

பிரிட்டனில் திறமையான பணியாளர்களுக்கான ‘ஸ்கில்டு வொர்க்கர்’ விசாவுக்கு, பொதுவாக ஆண்டுக்கு குறைந்தபட்சம் 41,700 பவுண்டு அல்லது சம்பந்தப்பட்ட பணிக்கான நிர்ணயிக்கப்பட்ட சம்பளம்—இவற்றில் அதிகமான தொகை தேவைப்படுகிறது. சில பிரிவினருக்கு விதிவிலக்குகள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் வேலைவாய்ப்பும் அவசியம்.

இந்த நிபந்தனைகள் காரணமாக, படிப்பை முடித்தவுடன் தகுதியான சம்பளத்துடன் வேலை பெறுவதும், விசாவுக்கான நிறுவன ஆதரவைப் பெறுவதும் முக்கியத் தேவைகளாக உள்ளன. இதனிடையே, அமெரிக்காவில் ஹெச்–1பி உள்ளிட்ட குறிப்பிட்ட விசாதாரர்கள் வேலை இழந்த பின்னர் பெறக்கூடிய அதிகபட்ச 60 நாள் அவகாசத்தை நீக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை முன்மொழிந்துள்ளது. இந்த அவகாசம், மாற்று வேலை அல்லது குடியேற்ற அந்தஸ்துக்கான வாய்ப்புகளைத் தேட உதவுகிறது.

புதிய முன்மொழிவு அமலானால், வேறு சட்டபூர்வ அனுமதி இல்லாதவர்கள் வேலை முடிவடைந்ததும் அமெரிக்காவைவிட்டு வெளியேற வேண்டிய நெருக்கடி ஏற்படலாம். எனினும், இது தற்போது கருத்துக் கேட்புக்காக வெளியிடப்பட்டுள்ள முன்மொழிவுதான்; அமலுக்கு வந்த இறுதி விதி அல்ல.

இந்தியர்கள் பெருமளவில் தாயகம் திரும்புவதாகக் கூறப்படும் நிலையில், அதற்கான எண்ணிக்கை விவரங்கள் வழங்கப்படவில்லை. விசா மாற்றங்களையும், அவற்றின் நடைமுறைத் தேதிகளையும் தெளிவாக வேறுபடுத்திப் பார்ப்பது அவசியமாகிறது.

## பிரிட்டனுக்கு புதிய சவால்! பிரியும் உரிமை கோரும் மூவர்!



லண்டன், செப். 14–

ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்தின் அரசியல் எதிர்காலத்தை அந்தந்தப் பகுதி மக்களே தீர்மானிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் வகையில், மூன்று முக்கியக் கட்சிகளின் தலைவர்கள் வேல்ஸ் தலைநகர் கார்டிப்பில் சந்திக்க உள்ளனர்.

ஸ்காட்லாந்து தேசியக் கட்சியான எஸ்.என்.பி. தலைவர் ஜான் ஸ்வின்னி, வேல்சின் பிளெய்ட் சிம்ரு தலைவர் ரன் அப் யோர்வெர்த், சின் பெயின் தலைவர்கள் மிஷெல் ஓ’நீல் மற்றும் மேரி லூ மெக்டொனால்டு ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்க உள்ளனர்.

அரசியல் எதிர்காலம் தொடர்பாகப் பொதுவாக்கெடுப்பு நடத்தும் உரிமையை வலியுறுத்தும் கூட்டுப் பிரகடனம் இந்தச் சந்திப்பில் இடம்பெறும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொருளாதாரம், எரிசக்தி மற்றும் ஐரோப்பாவுடனான உறவு உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஸ்காட்லாந்து மற்றும் வேல்சின் சுதந்திரத்தை முறையே எஸ்.என்.பி. மற்றும் பிளெய்ட் சிம்ரு கட்சிகள் ஆதரிக்கின்றன. வடக்கு அயர்லாந்தை அயர்லாந்துக் குடியரசுடன் இணைப்பதே சின் பெயின் கட்சியின் நோக்கமாக உள்ளது.

இந்தச் சந்திப்பு, ஐக்கிய இராச்சியத்திலிருந்து உடனடியாகப் பிரிவதற்கான அறிவிப்பாகாது. மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொதுவாக்கெடுப்பு உரிமையை முன்னிறுத்தும் அரசியல் முயற்சியாகும்.

## முதலமைச்சர் விஜய் ஸ்டைலில் விநாயகர் சிலைகள்!



சென்னை, செப். 14–

விநாயகர் சிலைகள், விஜயின் சமீபத்திய திரைப்படத் தோற்றங்கள் மற்றும் அவரது அரசியல் வருகையின் அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டித் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் விதவிதமான தோற்றங்களில் விநாயகர் சிலைகள் வடிவமைக்கப்பட்டுப் பூஜிப்பது வழக்கம். அந்த வகையில், சென்னையின் கொருக்குப்பேட்டை பகுதியில் முதலமைச்சர் விஜயை மையப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகள் பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்து வருகின்றன.

கொருக்குப்பேட்டையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த விநாயகர் சிலைகள், விஜயின் சமீபத்திய திரைப்படத் தோற்றங்கள் மற்றும் அவரது அரசியல் வருகையின் அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. இதில், சட்டப்பேரவையில் ஆக்ரோஷமாகப் பேசுவது போன்ற பாணியில் விநாயகர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் சமயங்களில் சைக்கிளில் சென்று வாக்களித்தது மற்றும் பிரசாரம் செய்ததை நினைவூட்டும் வகையில் சைக்கிள் ஓட்டுவது போல் விநாயகர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், விஜய் நடித்த ‘கில்லி’ படத்தின் பிரபல கபடி காட்சியைப் பிரதிபலிக்கும் வகையில் விநாயகர் சிலை அமைக்கப்பட்டுள்ளது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்த வினோதமான மற்றும் கலைநயமிக்க சிலைகளைக் காண அப்பகுதி மக்கள், இளைஞர்கள் மற்றும் விஜய் ரசிகர்கள் அதிகளவில் திரண்டு வருகின்றனர். ‘விஜய் விநாயகர்’ என்று அழைக்கப்படும் இந்தச் சிலைகளுடன் புகைப்படம் மற்றும் செல்ஃபி எடுத்துச் சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருகின்றனர். சினிமா மற்றும் அரசியலின் தாக்கம் வழிபாட்டு முறைகளிலும் எதிரொலிப்பது குறித்துச் சமூக வலைதளங்களில் பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டு வருகின்றன.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 14.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 28-ம் தேதி

# விமர்சனம் விவாதமாகட்டும்; வசை அரசியலாக வேண்டாம்!



ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியை விமர்சிப்பது தவறல்ல. ஆனால், அந்த விமர்சனம் எதை மையப்படுத்துகிறது என்பதில்தான் அரசியலின் தரம் வெளிப்படுகிறது. கொள்கைகளை எதிர்கொள்கிறதா? செயல்திட்டங்களைக் கேள்விக்கு உட்படுத்துகிறதா? அல்லது தனிநபர் மீதான தாக்குதலாகச் சுருங்கிவிடுகிறதா? திமுகதமிழக வெற்றிக் கழகம் இடையிலான அரசியல் மோதலை இந்தக் கேள்விகளோடுதான் அணுக வேண்டியுள்ளது.

விஜய்யின் அரசியல் வருகையையும் அவரது கருத்துகளையும் விமர்சிக்க திமுகவுக்கு உரிமை இருக்கிறது. அதேபோல, திமுகவின் செயல்பாடுகளைக் கேள்வி கேட்க விஜய்க்கும் உரிமை உண்டு. இந்த உரிமையுடன் இரு தரப்புக்கும் ஒரு பொறுப்பும் இருக்கிறது. மக்களின் பிரச்சினைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அரசியல் களத்தைத் தனிநபர் மோதலாக மாற்றிவிடக் கூடாது.

ஒருவரைக் கடுமையாக விமர்சிப்பதாலேயே அவரது அரசியல் செல்வாக்கைக் குறைத்துவிட முடியும் என்பது தவறான கணக்கு. சில நேரங்களில், அந்தத் தாக்குதல்களே அவருக்குக் கூடுதல் கவனத்தைப் பெற்றுத் தரலாம். விமர்சனத்தின் உள்ளடக்கத்தைவிட அதன் தொனியும் வார்த்தைகளும் சர்ச்சையாகும்போது, பதில் சொல்ல வேண்டிய இடத்திற்கு விமர்சித்தவரே தள்ளப்படுகிறார்.

விஜய் மீதான விமர்சனங்கள் தவெகவுக்குச் சாதகமாக மாறுகின்றன என்ற வாதத்தையும் இந்த அடிப்படையில் பரிசீலிக்கலாம். ஆனால், கவனம் கிடைப்பதும் மக்கள் ஆதரவைப் பெறுவதும் ஒன்றல்ல. சமூக வலைதளங்களில் பரவும் காணொலிகள், கருத்துகள், ஆதரவு முழக்கங்கள் ஆகியவற்றை மட்டும் வைத்து வாக்காளர்களின் தீர்ப்பைக் கணித்துவிட முடியாது.


நீண்ட அரசியல் அனுபவமும் அமைப்புப் பலமும் கொண்ட திமுக, தனது கருத்துகளின் வலிமையால் எதிரணியை எதிர்கொள்வதே பொருத்தமானது. நிர்வாகிகளின் வார்த்தைகளில் நிதானமும், விமர்சனங்களில் தரமும் இருப்பதை உறுதிப்படுத்துவது தலைமையின் பொறுப்பு. ஒரு மேடையில் எழும் கைதட்டல், பொதுமக்களிடமும் அதே வரவேற்பைப் பெறும் என்று கருதிவிடக் கூடாது.

இதே அளவுகோல் தவெகவுக்கும் பொருந்தும். எதிரணியின் சர்ச்சைக்குரிய பேச்சுகளால் கிடைக்கும் கவனம் மட்டுமே நிலையான அரசியல் அடித்தளமாகாது. வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழில் வளர்ச்சி உள்ளிட்ட பிரச்சினைகளில் தெளிவான கொள்கைகளும் நடைமுறைச் செயல்திட்டங்களும் தேவை. மாற்றத்தை முன்வைப்பவர்கள், அது எப்படிப்பட்ட மாற்றம் என்பதையும் விளக்க வேண்டும்.

இளைஞர்களின் ஆதரவை நாடும் கட்சிகள், அவர்களின் எதிர்காலம் குறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும். அரசியல் பேச்சில் வேகம் இருக்கலாம்; மக்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் திட்டங்களில் தெளிவு அவசியம்.

எதிராளிக்கு எவ்வளவு கடுமையாகப் பதிலடி கொடுத்தோம் என்பதைக் காட்டிலும், மக்களின் கேள்விகளுக்கு எவ்வளவு நேர்மையாகப் பதிலளித்தோம் என்பதே அரசியலின் அளவுகோலாக வேண்டும். திமுகவும் தவெகவும் தங்கள் போட்டியை அந்தத் திசையில் நகர்த்த வேண்டும். தமிழகத்துக்குத் தேவை தரமான அரசியல் விவாதம்; அதற்கான பொறுப்பு இரு தரப்புக்கும் இருக்கிறது.

# சட்டத்தை இயற்றும் இடத்தில் பெண்கள்!




சென்னை, செப். 14–

இந்தியாவிலேயே பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதில் தமிழ்நாடுதான் முன்னோடி. முதலில் அரசுப் பணிகளில் கலைஞர் கருணாநிதி 1989–ல் 30 சதவீத இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார். அதனை 2021–ம் ஆண்டு மு.க.ஸ்டாலின் 40 சதவீதமாக உயர்த்தினார். அதுபோல, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்யும் சட்டத்தை 1994–ம் ஆண்டு ஜெயலலிதா கொண்டு வந்தார். அதனை கலைஞர் கருணாநிதி, 1996–ம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் நடைமுறைப்படுத்தினார். பின்னர், 2016–ம் ஆண்டு ஜெயலலிதா அதனை 50 சதவீதமாக உயர்த்தினார். ஆனால், சட்டங்களை இயற்றும் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை நிறைவேற்றுவதில் பல முட்டுக்கட்டைகள் இருக்கின்றன.

தமிழக சட்டசபை வரலாற்றிலேயே 1991–ம் ஆண்டு ஜெயலலிதா முதல்–அமைச்சராக இருந்த காலத்தில்தான் அதிகபட்சமாக 32 பெண் எம்.எல்.ஏ.க்கள் இருந்தனர். இதில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் மட்டுமே 27 பேர். அந்தச் சமயத்தில் ராதாபுரம் தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ.வாக இருந்த ரமணி நல்லதம்பி, ஜெயலலிதாவிடம், “பெண் உறுப்பினர்களான நாம் அனைவரும் ஒரே நிறச் சேலை அணிந்தால் நன்றாக இருக்குமே” என்று கூறினார். அவ்வளவுதான்! ஜெயலலிதா அடுத்த நாளே அனைத்துப் பெண் உறுப்பினர்களுக்கும் பச்சை நிறச் சேலைகளை வாங்கிக் கொடுத்தார். இதையடுத்து, கவர்னர் மாளிகையில் நடந்த ஒரு விழாவில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா உள்பட அனைத்துப் பெண் உறுப்பினர்களும் பச்சைச் சேலை அணிந்து வந்தது வரலாற்றில் முக்கியப் பதிவாக அமைந்தது.

தற்போதைய சட்டசபையில் த.வெ.க.வைச் சேர்ந்த 13 பேர், அ.தி.மு.க.வைச் சேர்ந்த 6 பேர் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 4 பேர் என மொத்தம் 23 பெண்கள் எம்.எல்.ஏ.க்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், இதில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 2 பேர் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்துவிட்டனர். தி.மு.க.வில் இருந்து ஒரு பெண் உறுப்பினர் கூட இல்லை. தமிழக அமைச்சரவையை எடுத்துக்கொண்டால், இதுவரை இல்லாத அளவுக்கு 4 பெண் அமைச்சர்கள் இருந்தாலும், மொத்தமுள்ள 35 அமைச்சர்களில் இது வெறும் 11.43 சதவீதம் மட்டுமே. ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் மத்திய, மாநில அமைச்சர்களாக 679 பேர் இருக்கும் நிலையில், அதில் 66 பேர் மட்டுமே பெண் அமைச்சர்கள். அதாவது, 10 அமைச்சர்களுக்கு ஒரு பெண் அமைச்சர் என்ற அளவில்தான் உள்ளனர். இந்தக் கணக்குகளையெல்லாம் பார்த்துத்தான் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு சட்டத்தை அனைவரும் வலியுறுத்துகிறார்கள். இந்தக் கருத்தை வலியுறுத்தி, முதல்–அமைச்சர் விஜய் தமிழக சட்டசபையில் அரசின் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார். அது அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேறியது. மொத்த வாக்காளர்களில் 49 சதவீதம் பெண் வாக்காளர்களாக இருக்கும் நிலையில், சட்டம் வந்தால்தான் பெண்களின் எண்ணிக்கை உயர வேண்டும் என்பதில்லை.

சட்டம் இல்லாமலேயே 1991–ம் ஆண்டு நடந்த தேர்தலில் ஜெயலலிதா தனது கட்சி சார்பில் பெண்களுக்கு வாய்ப்பளித்து, 27 பேரை வெற்றி பெறச் செய்ததை அனைத்துக் கட்சிகளும் பின்பற்றினால், “சட்டங்கள் செய்வதும், பட்டங்கள் ஆள்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்” என்று பெண்கள் ஆனந்தக் கும்மி அடிக்க முடியும்.



# தங்கம் வாங்க ஐதீக நேரம்?



தங்கத்தை மகாலட்சுமியின் அம்சமாகக் கருதும் மரபில், புதிய நகைகள் வாங்கும்போது சில ஆன்மீக வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். அட்சய திருதியை மட்டுமின்றி, பரணி, பூரம், பூராடம் நட்சத்திரங்கள் வரும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தங்கம் வாங்குவதும் செல்வ வளத்தைப் பெருக்கும் என்பது சிலரது நம்பிக்கை.

புதிதாக வாங்கிய நகைகளை வெள்ளைத் துணி அல்லது காகிதத்தில் சுற்றி, சிறிது நேரம் கல் உப்பில் வைக்கும் வழக்கமும் கூறப்படுகிறது. இதனால் தோஷங்கள் நீங்கும் என்பது நம்பிக்கையே தவிர, உறுதிப்படுத்தப்பட்ட உண்மை அல்ல. சனிக்கிழமை, ரோகிணி நட்சத்திரம், அமிர்தயோகம் ஆகியவை இணையும் நாளில் விநாயகரை வழிபட்டு நகை வாங்குவது சிறப்பானது என்றும் சில ஆன்மீகக் கருத்துகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய வழிபாடுகள் தனிப்பட்ட நம்பிக்கை சார்ந்தவை. இவற்றைப் பின்பற்றுவதால் வீட்டில் தங்கம் தொடர்ந்து சேரும் என்பதற்கு ஆதாரம் இல்லை. நகை வாங்குவதைத் தங்கள் தேவைக்கும் பொருளாதார வசதிக்கும் ஏற்பத் திட்டமிடுவதே நடைமுறைக்கு ஏற்றது.

# கட்சியில் இனி உறவினர்களுக்கு பதவியில்லை - மாயாவதி அதிரடி!



லக்னோ, செப். 14–

பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவரும், உத்தரபி ரதேச முன்னாள் முதல்–மந்திரியுமான மாயா வதி, தனது மருமகன் ஆகாஷ் ஆனந்தை சமீ பத்தில் கட்சியில் இருந்து நீக்கினார். இந்த நிலையில் நேற்று அவர் லக்னோவில் நிருபர்களிடம் பேசும்போது கூறியதாவது:–

கட்சியின் நிறுவனத் தலைவர் கன்ஷிராம் வழியில், எனது சகோதரர்கள், சகோதரிகள், இளம் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவி னர்களை எம்.பி., எம்.எல்.ஏ., மந்திரி உள்ளிட்ட அரசியல் பதவிகளில் இருந்து விலக்கி வைத்திருக்கிறேன். எனது சகோதரர் ஆனந்த் குமாரின் மகன்களான ஆகாஷ் ஆனந்த், ஈஷான் ஆனந்த் ஆகிய இருவருக்கும் கட்சியில் எந்த அரசியல் பொறுப்பும் வழங்கப்படாது. இது எனது இறுதி யான முடிவு.

என் சகோதரர் ஆனந்த் குமார் என்னுடன் இருந்து எனக்கு உதவுவதுடன், கட்சிப் பொறுப்புகளையும் கவனித்து வருகிறார். ஆனால் அவரது குடும்பத்தினர் அந்த உறவை அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்துவது கட்சிக்கும், பகுஜன் இயக்கத்துக்கும் நல்லதல்ல. எனது உடல்நிலை குறித்து தவறான தகவல்கள் பரப்பப்படுகிறது. இது போன்ற வதந்திகளை நம்ப வேண்டாம். நான் நல்ல உடல்நலத்துடன் இருக்கிறேன், தொடர்ந்து கட்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகிறேன்.

கட்சியில் இருந்து 3–வது முறையாக நீக்கப்பட்ட ஆகாஷ் ஆனந்த், வீட் டில் இருந்த கட்சிப் பொறுப்பாளர் அலோக் குமாரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது உடல்நிலை குறித்து விசாரித்து உள்ளார். அவர் நீக்கப்பட்டபோதும் எனது மாமனாரும் முன்னாள் எம்.பி.யுமான அசோக் சித்தார்த்தின் செல்வாக்கில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

# சபரிமலை அய்யப்பன் கோவில் மண்டல பூஜை விழா ஏற்பாடுகளுக்கு ரூ.551 கோடி ஒதுக்கீடு!




திருவனந்தபுரம், செப். 14–

சபரிமலை அய்யப்பன் கோவிலில் வருடாந்திர மண்டல பூஜை–மகர விளக்கு விழா நவம்பர் மாதம் மத்திய பகுதியில் தொடங்கி அடுத்த ஆண்டு ஜனவரி 3–ம் வாரம் வரை நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை திருவிதாங்கூர் தேவசம்போர்டு தொடங்கி உள்ளது.

இந்த பணிகளுக்காக சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு ரூ.551.5 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதாக கேரளம் முதல்–மந்திரி சதீசன் தெரிவித்து உள்ளார். மாநில பொதுப்பணித்துறை மந்திரி பஷீர், சபரிமலையில் ஏற்பாடுகளை ஆய்வு செய்தபின் இந்த தொகையை அரசுக்கு பரிந்துரைத்தார்.

அதன்பேரில் இந்த தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாக முதல்–மந்திரி கூறினார். முன்னதாக, மண்டல பூஜை–மகர விளக்கு நிகழ்வுகள் சுமுகமாக நடைபெறுவதற்கு தேவசம்போர்டுடன் இணைந்து மாநில அரசு பணியாற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.


# மதுராந்தகத்தில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர வாகன சோதனை!




மதுராந்தகம், செப். 14–

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு அடுத்த மாதம் 6–ந் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக மதுராந்தகம் தொகுதியில் சுவரொட்டிகள், பேனர்கள், சுவர் விளம்ப ரங்கள் உள்ளிட்டவை அகற்றப்பட்டு வருகின்றன. மேலும், கட்சி கொடிகள் மற்றும் கொடிகம்பங்களும் அகற்றப்பட்டுள்ளன. தேர்தல் விதிமுறைகள் அமலில் உள்ள நிலையில், வாக்காளர்களுக்கு பணம், பரிசுப்பொருட்கள் உள்ளிட்டவை வழங்கப்படுவதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மதுராந்தகம் பகுதிக்குள் நுழையும் கார். வேன் உள்ளிட்ட வாகனங்களை தேர்தல் பறக்கும் படையினர் தீவிரமாக சோதனை செய்து வருகின்றனர். வாகனங்களில் பணம், பரிசுப்பொருட்கள் மற்றும் தேர்தல் விதிமுறை களை மீறும் பொருட்கள் கொண்டு செல்லப்படு கிறதா? என்பது குறித்து சோதனை நடத்தப்படுகிறது. சோதனையின்போது கார்களில் பொருத்தப்பட்டிருந்த அரசியல் கட்சிகளின் கொடிகள் அகற்றப்பட்டன. பின்னர் அந்த வாகனங்கள் மதுராந்தகம் பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டன. தேர்தல் விதிமுறைகள் முறை யாக கடைபிடிக்கப்படு கிறதா? என்பதை கண்காணிக்கும் வகையில் மது ராந்தகம் தொகுதி முழுவதும் தொடர்ந்து வாகன சோதனை மற்றும் கண் காணிப்பு பணிகள் நடைபெ றும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சினிமா துளிகள்..!



## துருவ் விக்ரம் நடிக்கும் புதிய படத்தின் டைட்டில் வெளியீடு...!




மைத்ரி நிறுவனம் தயாரிப்பில் துருவ் விக்ரம் நடிக்கும் படத்தின் டைட்டில் இன்று வெளியானது.

துருவ் விக்ரம், பைசன் படத்தின் மிகப்பெரிய வெற்றிக்குப் பிறகு அறிமுக இயக்குநர் கரண் அரவிந்த் குமார் இயக்கத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தில் நடிகர்கள் பிருத்விராஜ், சாய் தீனா உள்ளிட்டோரும் நடிப்பதாகக் கூறப்படுகிறது.

இப்படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரித்துள்ளது. சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார்.

ரொமாண்டிக் – ஆக்ஷன் திரைப்படமாக உருவாகி வரும் இத்திரைப்படத்தின் முதல் பார்வை போஸ்டர் இன்று வெளியாகியுள்ளது. இப்படத்திற்கு ஜாக்கி எனப் பெயரிட்டுள்ளனர்.

துருவ் தந்தை விக்ரமின் அடுத்தப் பட டைட்டில் அறிவிப்பு நாளை வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில், 40-ம் ஆண்டு அமைப்பு தினவிழா!



நாமக்கல், செப். 14–

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, மாவட்ட ஊராட்சி மன்ற அலுவலகத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை சார்பில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில், 40ம் ஆண்டு அமைப்பு தினவிழா நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சந்திரா முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சியர் மதுபாலன் தலைமை வகித்து, ரத்த தான முகாமை துவக்கி வைத்து பேசினார்.

அப்போது, பொதுமக்களின் சேவையில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், தங்களது 40–வது அமைப்பு தினத்தை முன்னிட்டு, ரத்ததானம் செய்வோம், பிற உயிர் காப்போம், என்ற நோக்கத்தோடு, ரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது என்றார்.

சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டு ரத்த தானம் வழங்கினார்கள். நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் முருகலட்சுமி, சங்க மாவட்ட தலைவர் பாலவிநாயகம், செயலாளர் பிரபுசங்கர், பொருளாளர் லோகமணிகண்டன், ரெட்கிராஸ் செயலாளர் ராஜேஷ்கண்ணன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# சென்னைக்கு 3,565 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!



சென்னை, செப்.14–

விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு நாளை அரசு விடுமுறையாகும். சனி, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாட்களோடு விநாயகர் சதுர்த்தி பண்டிகை வருவதால் 3 நாட்கள் தொடர் அரசு விடுமுறை கிடைக்கிறது.

இதனால், வெளியூர் பயணம் அதிகரிக்கும் என்பதால் அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு கடந்த வியாழக்கிழமை 585 சிறப்பு பஸ்களும், கடந்த வெள்ளிக்கிழமை 1,255 பஸ்களும், கடந்த 12–ந் தேதி 1,030 பஸ்களும், 13–ந் தேதி 650 பஸ்களும் இயக்கப்பட்டது.

கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு மேற்கண்ட இந்த நாட்களில் 585 பஸ்களும் இயக்கப்படுகிறது.

பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை நகரங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட்டது. மாத வரத்தில் இருந்து கள்ளக் குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், வேலூர், ஒசூர், புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு நாளை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தலா 110 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட்டது.

மேலும் 14–ந்தேதி சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் 765 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டது. தொடர் விடுமுறைக்காக சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் சென்னைக்கு திரும்ப 3,565 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது. தமிழகத்தின் பல ஊர்களில் இருந்து நாளை சென்னைக்கு திரும்ப 2,240 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. நாளை மறுநாள் சென்னைக்கு 1,325 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்து துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

## நலம் நலமறிய..!
## மருத்துவ குறிப்புகள்



# தேநீர்: ஆறவைத்துக் குடியுங்கள்!



மிகவும் சூடான பானங்களை அருந்தும் பழக்கத்துக்கும் உணவுக்குழாய் புற்றுநோய் அபாயத்துக்கும் தொடர்பு இருப்பதாக ஆய்வு தெரிவிக்கிறது.

காலையில் ஒரு கோப்பை தேநீருடன் நாளைத் தொடங்குவது பலரின் வழக்கம். ஆனால், தேநீர் அல்லது காபியை மிகவும் சூடாக அருந்துவோர், அதைச் சற்று ஆறவைத்துக் குடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என ஆய்வு முடிவுகள் உணர்த்துகின்றன.

இன்டர்நேஷனல் ஜர்னல் ஆஃப் கேன்சர் இதழில் வெளியான ஆய்வில், இங்கிலாந்தின் 'மில்லியன் மகளிர் ஆய்வு' மற்றும் 'யுகே பயோபேங்க்' ஆகியவற்றில் பங்கேற்ற 9,77,282 பேரின் தரவுகள் ஆராயப்பட்டன. வெதுவெதுப்பான பானங்களை விரும்புவோருடன் ஒப்பிடும்போது, மிகவும் சூடான பானங்களை விரும்புவோருக்கு உணவுக்குழாயில் ஏற்படும் 'ஸ்குவாமஸ் செல் கார்சினோமா' என்ற புற்றுநோயின் ஒப்பீட்டு அபாயம் சுமார் மூன்று மடங்காக இருந்தது. உணவுக்குழாய் புற்றுநோயின் மற்றொரு வகையான 'அடினோகார்சினோமா'வுடன் இதே தொடர்பு காணப்படவில்லை. ஆய்வு ஆதாரம்

இந்த முடிவு, தேநீர் குடிப்பவர்களுக்குப் புற்றுநோய் நிச்சயம் ஏற்படும் என்று பொருளல்ல. மேலும், இது ஒரு கண்காணிப்பு ஆய்வு; காரணத்தை உறுதிப்படுத்தும் சோதனை அல்ல. பானங்களின் வெப்பநிலை நேரடியாக அளவிடப்படாமல், பங்கேற்பாளர்கள் தெரிவித்த விருப்பத்தின் அடிப்படையிலேயே வகைப்படுத்தப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது. ஆய்வின் விவரங்கள்

அதிக வெப்பம் உணவுக்குழாயின் உட்புறத் திசுக்களைத் தொடர்ந்து சேதப்படுத்துவது, இந்தத் தொடர்புக்கான சாத்தியமான விளக்கமாகக் கருதப்படுகிறது. சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் (IARC), 65 டிகிரி செல்சியஸுக்கு மேல் சூடாக உள்ள பானங்களை அருந்துவதை, மனிதர்களுக்குப் புற்றுநோய் ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் அதிகமுள்ள பிரிவில் வகைப்படுத்தியுள்ளது. இந்த வெப்பநிலை வரையறை, புதிய ஆய்வில் நேரடியாக அளவிடப்பட்ட எல்லை அல்ல. IARC விளக்கம்

தேநீரை முற்றிலுமாகத் தவிர்ப்பதற்குப் பதிலாக, மிகச் சூடாக இருக்கும்போது அருந்தாமல் ஆறவிடுவது நடைமுறைக்கு ஏற்ற முன்னெச்சரிக்கை. ஆறும் நேரம் கோப்பையின் அளவு, பானத்தின் அளவு மற்றும் சுற்றுப்புற வெப்பநிலையைப் பொறுத்து மாறும். எனவே, குறிப்பிட்ட சில நிமிடங்கள் காத்திருப்பது மட்டுமே போதுமானது என்று கருத வேண்டாம்.

உணவுக்குழாய் புற்றுநோய் அபாயத்தைக் குறைப்பதில் புகையிலையைத் தவிர்ப்பதும், மது அருந்துவதைக் குறைப்பதும் முக்கியம். பானத்தின் வெப்பநிலையுடன் இந்தப் பழக்கங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். IARC தகவல்.

# ஆசியக் கோப்பை: இந்திய மகளிர் அணி 8-ஆவது முறை சாம்பியன்!



மகளிருக்கான 10–ஆவது ஆசிய கோப்பை டி20 கிரிக்கெட்டில் இந்தியா 72 ரன்கள் வித்தியாசத்தில் நடப்பு சாம்பியன் இலங்கையை ஞாயிற்றுக்கிழமை வீழ்த்தி, கோப்பையைக் கைப்பற்றியது.

இறுதி ஆட்டத்தில் முதலில் இந்தியா 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 183 ரன்கள் சேர்க்க, இலங்கை 20 ஓவர்களில் 10 விக்கெட்டுகள் இழந்து 111 ரன்களே எடுத்தது. இந்த வெற்றியுடன், போட்டியில் இந்தியா 8–ஆவது முறையாக சாம்பியன் ஆனது. இதற்கு முன், 2004, 2005–06, 2006, 2008, 2012, 2016, 2022 ஆகிய ஆண்டுகளில் இந்தியா வாகை சூடியது.

முன்னதாக இறுதி ஆட்டத்தில் டாஸ் வென்று பேட் செய்த இந்திய அணியில், ஸ்மிருதி மந்தனா – ஷஃபாலி வர்மா கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 129 ரன்கள் சேர்த்தது. ஷஃபாலி 9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 68, ஸ்மிருதி 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 59 ரன்களுக்கு ஆட்டமிழந்தனர்.

கேப்டன் ஹர்மன்பிரீத் கௌர் 14, ரிச்சா கோஷ் 17, தீப்தி சர்மா 5 ரன்களுக்கு வெளியேற, ஓவர்கள் முடிவில் பாரதி ஃபுல்மாலி 2, ஜி.கமலினி 15 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை பௌலர்களில் மிதாலி அயோத்யா, சமரி அத்தபட்டு, சாமுடி பிரபோதா ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். பின்னர் இலங்கை இன்னிங்ஸில் இமேஷா துலானி 4, கேப்டன் சமரி அத்தபட்டு 4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 36, விஷ்மி குணரத்னே 2 பவுண்டரிகளுடன் 20 ரன்களுக்கு சாய்க்கப்பட்டனர். ஹர்ஷிதா சமரவிக்ரமா 9, நீலாக்ஷிகா சில்வா 1 பவுண்டரியுடன் 22, கவிஷா தில்ஹரி 7 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினர். ஹாசினி பெரெரா 1, மிதாலி அயோத்யா 0, சுகந்திகா குமாரி 1, கெஷினி நுத்யங்கனா 9 ரன்களுக்கு வீழ்ந்தனர். இந்திய பௌலர்களில் ஸ்ரீசரணி 4, தீப்தி சர்மா 3, கிராந்தி கெட், ஷஃபாலி வர்மா, பிரேமா ராவத் ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.

# இடைத்தேர்தலில் தவெக கூட்டணி வெற்றிபெற ஒத்துழைப்போம்: திருமாவளவன்!

சென்னை, செப். 14–

வருகிற இடைத்தேர்தலில் தவெக கூட்டணி வெற்றிபெற ஒத்துழைப்பு அளிப்போம் என விசிக தலைவர் தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் செய்தியாளர்களுடன் திருமாவளவன் பேசியதாவது, "தவெக ஆட்சியமைப்பதற்கு மட்டுமே ஆதரவு தருவதாக இடதுசாரிகள் கூறி வந்தார்கள். அதன் அடிப்படையிலேயே, இந்த ஆட்சி தொடர்வதற்கான ஆதரவு எப்போதும் உண்டு.



ஆனால், தாராபுரம் மற்றும் மதுராந்தகத்தில் இடைத்தேர்தலில் தனித்து நிற்பதாக இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அறிவித்துள்ளன. இது அவர்களுக்கான உரிமை.

தற்போது மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணியில் விசிக இடம்பெற்றிருக்கிறோம். இவ்விரு தொகுதிகளில் கூட்டணி வெற்றி பெறுவதற்கு விசிக தரப்பில் ஒத்துழைப்பு நல்குவோம்.

ஆளுங்கட்சி குறித்து திமுக எம்.பி.யான ஆ. ராசாவின் பேச்சு மிகுந்த அதிர்ச்சியளிக்கக் கூடியதாக இருந்தது. இது திமுகவுக்கே எதிராகப் போய்விடும்.

முதல்வரையே ஒருமையில் பேசுவது, மற்றவரின் பிறப்பு குறித்து கேள்வி எழுப்புவது என்பதெல்லாம் பெரியார் பாசறையில் வளர்ந்தவரின் பேச்சாகத் தெரியவில்லை. இது திமுக மீதான நன்மதிப்பைச் சீர்குலைக்கும்" என்று தெரிவித்தார்.

# ஸ்டாலின் தலைமையில் மூன்றாவது அணி?

சென்னை, செப். 14–

தேசிய அளவில், தி.மு.க., தலைவர் ஸ்டாலின் தலைமையில், மூன்றாவது அணியை உருவாக்க, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், சிவசேனா கட்சி தலைவர் உத்தவ் தாக்கரே ஆகியோரை, தி.மு.க., – எம்.பி., கனிமொழி சந்தித்து பேசியதாக, தகவல் வெளியாகி உள்ளது.



ஸ்டாலின் கனிமொழி

கருத்து வேறுபாடு மஹாராஷ்டிர மாநிலம் மும்பையில், உத்தவ் தாக்கரேவை நேற்று முன்தினம், கனிமொழி சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு, ஒரு மணி நேரம் நீடித்தது. மேலும், சரத்பவார் மற்றும் அவரது மகளும் லோக்சபா எம்.பி.,யுமான சுப்ரியா சுலே ஆகியோரை, டில்லியில் கனிமொழி சந்தித்து பேசினார்.

'இண்டி' கூட்டணியில், காங்கிரசுடன் முரண்பாட்டில் உள்ள மாநில கட்சிகளை ஒன்றிணைத்து, தேசிய அளவில் பா.ஜ., மற்றும் காங்கிரஸ் அல்லாத மூன்றாவது அணியை உருவாக்க தி.மு.க., திட்டமிட்டுள்ளது. இந்த சந்திப்புகள், அதற்கு அச்சாரம் என்று கூறப்படுகிறது.

தி.மு.க., நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: உத்தவ் தாக்கரேவை, கனிமொழி சந்தித்தபோது, தென் மாநிலங்களை பாதிக்கும் லோக்சபா தொகுதி மறு சீரமைப்பு பிரச்னை குறித்தும் அதற்கு எதிராக மாநில கட்சிகள் ஒன்றிணைந்து செயல்படுவது குறித்தும் கனிமொழி விவாதித்து உள்ளார்.

மேலும், தேசிய அளவில் மூன்றாவது அணியை உருவாக்குவது குறித்தும் பேசியுள்ளார். சென்னையில், முதல்வர் விஜய் தலைமையில் நடந்த லோக்சபா தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரான கூட்டத்தில் காங்., பங்கேற்றது; தி.மு.க., புறக்கணித்தது. இதேபோல, மஹாராஷ்டிராவில், காங்கிரசுடன் உத்தவ் தாக்கரேக்கு கருத்து வேறுபாடு உருவாகி உள்ளது.

நெருங்கிய தோழி இந்த சூழலில், மூன்றாவது அணியை உருவாக்க, மாநில கட்சிகளின் தலைவர்களை அடுத்தடுத்து சந்திக்க கனிமொழி திட்டமிட்டுள்ளார். அடுத்தகட்டமாக, ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்தவரான பஞ்சாப் முதல்வர் பகவந்த்மானை சந்திக்க உள்ளார். ஏற்கனவே, கடந்த சட்டசபை தேர்தலில், ஆம் ஆத்மி கட்சி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால், தி.மு.க.,வுக்கு ஆதரவாக தமிழகத்தில் பிரசாரம் செய்தார்.


உ.பி., முன்னாள் முதல்வரும், சமாஜ்வாடி கட்சி தலைவருமான அகிலேஷ் யாதவையும் கனிமொழி சந்திக்க உள்ளார். அகிலேஷின் மனைவியான லோக்சபா எம்.பி., டிம்பிள் யாதவ், கனிமொழியின் நெருங்கிய தோழி ஆவார்.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளின் இடைத்தேர்தல் முடிந்ததும், மேற்கு வங்க முன்னாள் முதல்வரும் திரிணமுல் காங்., தலைவருமான மம்தா பானர்ஜியையும் கனி மொழி சந்தித்து, தேசிய அளவில், தி.மு.க., தலைவர் ஸ்டாலின் தலைமையில், மூன்றாவது அணியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவார்.

இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

# ஒரே விநாடியில் எச்சரிக்கை... அசத்தும் 'நிதி மோசடி அபாய குறியீடு'!

இந்தியாவில் எண்மவழி பரிவர்த்தனைகள் நாள்தோறும் புதிய சாதனைகளைப் படைத்துவரும் நிலையில், இணையவழி (சைபர்) குற்றவாளிகளின் சதி வலைகளிலிருந்து பொதுமக்கள் சிறுக, சிறுக சேமித்த பணத்தைப் பாதுகாக்க மத்திய தொலைத்தொடர்புத் துறை ஒரு சக்தி வாய்ந்த அரணை உருவாக்கியுள்ளது.




தொலைத்தொடர்புத் துறையின் 'எண்ம நுண்ணறிவுத் தளத்தின்' (டிஐபி) கீழ் 2025, மே 22–ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்ட 'நிதி மோசடி அபாயக் குறியீட்டு' (எஃப்ஆர்ஐ) வசதி, வெற்றிகரமாக 15 மாதங்களை நிறைவு செய்துள்ளது. இந்தக் குறுகிய காலத்தில், ரூ.5,000 கோடிக்கும் அதிகமான இணையழி மோசடி இழப்புகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறுகிறது.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால், இந்தப் பெருந்தொகை திருடப்பட்டு, பின்னர் கண்டறியப்பட்டு, முடக்கப்படவோ, மீட்கப்படவோ இல்லை. மாறாக, பயனர்களின் வங்கிக் கணக்கைவிட்டு ஒரு பைசாகூட வெளியேறாத வகையில், பரிவர்த்தனை நடைபெறவிருந்த விநாடி பொழுதிலேயே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வழக்கமாக ஓர் இணையவழி மோசடி நடக்கும்போது, குற்றவாளி திருடிய பணத்தை சில நிமிஷங்களிலேயே பல போலி (மியூல் கணக்குகள்) வங்கிக் கணக்குகளுக்கு மாற்றி, உடனடியாக எடுத்துவிடுவார். அதன் பிறகு தொடர்புடையவர்கள் புகார் அளித்து, காவல் துறை வழக்குப் பதிவு செய்து, வங்கிக் கணக்குகளை முடக்குவதற்குள் காலம் கடந்துவிடும்.

தானியங்கி பரிசோதனை: அதாவது, பயனர் ஒருவர் 'யுபிஐ' அல்லது வங்கிச் செயலியில் பணப் பரிமாற்றம் செய்யும்போதே, பின்னணியில் மிகக் குறுகிய நேரத்தில் இந்தச் சரிபார்ப்பு சோதனை முடிந்துவிடும். இதன்மூலம் தொடர்புடையவர்கள் காவல் நிலையம் செல்ல வேண்டிய அவசியமோ, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டிய தேவையோ, வங்கிக் கணக்குகளை முடக்கும் அலைச்சலோ ஏற்படுவதில்லை.

'இந்த விஷயத்தில் ரூ.5,000 கோடி பாதுகாக்கப்பட்டது என்பது தடுத்து நிறுத்தப்பட்ட பணத்தின் அளவு மட்டுமே. களத்தில் இதன்மூலம் தவிர்க்கப்பட்ட லட்சக்கணக்கான புகார்கள், விசாரணைக்கான கால நேரம், காவல் புலனாய்வாளர்களின் மனித உழைப்பு, மக்களின் மன உளைச்சல் எனக் கணக்கிட்டால், நாட்டின் பொருளாதாரத்துக்கு இதன் பங்களிப்பு அளப்பரியது' என்கின்றனர் மத்திய தொலைத்தொடர்புத் துறை அதிகாரிகள்.

எஃப்ஆர்ஐ எவ்வாறு செயல்படுகிறது?: எஃப்ஆர்ஐ என்பது தொலைத்தொடர்பு தரவுகளையும், செயற்கை நுண்ணறிவுப் பகுப்பாய்வையும் இணைத்துச் செயல்படும் ஒரு நவீன பாதுகாப்பு வசதியாகும். இந்த எண்ம நுண்ணறிவுத் தளம் (டிஐபி) இயங்கும்

முறை பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது: பொதுமக்கள் புகார்கள் பதிவு செய்வதற்கான சஞ்சார் சாத்தி (San–char Saathi) தளம், தேசிய இணையவழி குற்றப் புகார் பதிவு இணையதளம் (என்சிஆர்பி) மற்றும் வங்கி, தொலைத்தொடர்புத் துறையின் நுண்ணறிவுத் தகவல்கள் ஆகிய மூன்று முக்கிய அமைப்புகளிலிருந்து பெறப்படும் தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்டு, எஃப்ஆர்ஐ தளத்துக்கு அனுப்பப்படுகின்றன.

இந்தத் தளம், பெறப்பட்ட தகவல்களை நிகழ்நேரத்தில் விரிவாகப் பகுப்பாய்வு செய்து, அவற்றின் ஆபத்துத் தன்மையைப் பொறுத்து, நடுத்தர அபாய நிலை, உயர் அபாய நிலை மற்றும் மிக அதிக அபாய நிலை என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்துகிறது.

இவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், தொடர்புடைய வங்கி மற்றும் யுபிஐ செயலிகளுக்கு ஒரே விநாடியில் எச்சரிக்கை குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது. இதன்மூலம், இணையவழி அல்லது எண்ம முறையில் நடைபெறும் மோசடிப் பரிவர்த்தனைகள் உடனடியாகக் கண்டறியப்பட்டுத் தடுக்கப்படுகின்றன.

உதாரணமாக, இந்த எச்சரிக்கை குறுஞ்செய்திகள் டிஐபி மூலம் வங்கிகளுக்கும், யுபிஐ செயலி நிறுவனங்களுக்கும் அனுப்பப்படும். ஒரு பயனர் அந்த சந்தேகத்துக்குரிய எண்ணுக்குப் பணம் அனுப்பும்போது, செயலியிலேயே 'இந்த எண் ஆபத்தானது' என்ற எச்சரிக்கை திரையில் தோன்றும் அல்லது பரிவர்த்தனை தானாகவே ரத்து செய்யப்படும்.

'ரூ. 5,000 கோடி என்ற தொகையின் பின்னணியில் லட்சக்கணக்கான மக்களின் பாதுகாப்பும் மறைந்துள்ளன. உதாரணமாக, போலி கேஒய்சி அழைப்பை நம்பி வாழ்நாள் சேமிப்பை இழக்காமல் தப்பித்த ஓர் ஓய்வூதியதாரர், மோசடி விநியோகஸ்தருக்கு அனுப்ப இருந்த பணம் சில விநாடிகளுக்கு முன் தடுத்து நிறுத்தப்பட்ட ஒரு சிறு வணிகர், திரையில் தோன்றிய எச்சரிக்கையைப் பார்த்து உடனடியாக பரிவர்த்தனையை நிறுத்திய புதிய எண்ம பயனாளி என இவர்கள் ஒவ்வொருவரும் நிதி இழப்பு ஏற்பட்ட பிறகு விசாரணை என்ற அலைச்சலுக்கு ஆளாகாமல், பாதிப்பு நடப்பதற்கு முன்பே பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள்' என்று மத்திய தொலைத்தொடர்புத் துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். 'இணையவழிக் குற்றங்கள்' வெறும் தொலைத்தொடர்புத் துறை மூலம் நிறுத்தப்படுவதில்லை. இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ), இந்திய தேசிய பணப் பரிவர்த்தனை ஆணையம் (என்பிசிஐ) ஆகியவை இணைந்து 1,600–க்கும் மேற்பட்ட வங்கிகள் மற்றும் யுபிஐ செயலிகளை 'டிஐபி' தளத்துடன் இணைத்துள்ளன.

அத்துடன், இந்திய பங்குகள் பரிவர்த்தனை வாரியத்தின் (எஸ்இபிஐ) கூட்டுடன், போலி டீமேட் கணக்குகள் மற்றும் போலி வர்த்தகப் பயன்பாடுகள் மூலம் நடைபெறும் பங்குச்சந்தை மோசடிகளைத் தடுக்க ஏதுவாக எப்ஆர்ஐ தளம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், காப்பீட்டு பாலிசிகள் வழங்குவது, க்ளைம் பெறுவது மற்றும் ஓய்வூதியதாரர்களின் கணக்குகளிலிருந்து பணம் திருடப்படுவதைத் தடுக்கவும் இந்த ஆபத்துகால குறிகாட்டி தற்போது பயன்படுத்தப்படுகிறது.

அதிகாரிகளுக்குப் பயிற்சி: இந்தத் தொழில்நுட்பத்தைச் சரியாகப் பயன்படுத்த 1,500 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு 25–க்கும் மேற்பட்ட சிறப்புப் பயிற்சிகளை மத்திய தொலைத்தொடர்புத் துறை வழங்கியுள்ளது. இந்த விவகாரத்தில் 'ஜன பாகிதாரி' எனப்படும் பொதுமக்களின் பங்களிப்பே முதல் அரண் என்கிறது மத்திய அரசு. விழிப்புணர்வுள்ள ஒரு குடிமகன் அளிக்கும் ஒரு சிறிய புகார், பல ஆயிரம் பேரின் பணத்தைக் காப்பாற்றுகிறது. 'சஞ்சார் சாத்தி' செயலியை ஆண்ட்ராயிட், ஐபோன் தரவுத் தளத்தில் பதிவிறக்கம் செய்து கைப்பேசிகளில் நிறுவலாம். மத்திய தொலைத்தொடர்புத் துறையின் இந்த நவீனத் தொழில்நுட்ப அரண், இந்தியாவின் எண்மப் பொருளாதாரத்தை மேலும் பாதுகாப்பானதாகவும் நம்பகமானதாகவும் மாற்றியுள்ளது என்பதால் இந்தச் சேவைக்கு மக்கள் மத்தியிலும் நாளுக்கு நாள் வரவேற்பு பெருகி வருகிறது.

# வேலை வாய்ப்பு
## SSC: 1,871 சார்பு ஆய்வாளர் பணியிடங்கள்!



பணியாளர் தேர்வாணையம் (SSC) நடத்தும் 2026ஆம் ஆண்டுக்கான தேர்வின் மூலம், டெல்லி காவல்துறை மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளில் (CAPFs) காலியாக உள்ள 1,871 சார்பு ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப இணையவழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| விவரம் | தகவல் |
| --- | --- |
| நிறுவனம் | பணியாளர் தேர்வாணையம் (SSC) |
| அறிவிக்கை எண் | E/37/2026–C–2 SECTION |
| பதவியின் பெயர் | சார்பு ஆய்வாளர் (Sub–Inspector) |
| மொத்த காலியிடங்கள் | 1,871 |
| வேலை வகை | மத்திய அரசு வேலை |
| பணி நியமனம் | நிரந்தர அடிப்படையில் |
| பணியிடம் | இந்தியா முழுவதும் |
| விண்ணப்பிக்கும் முறை | இணையவழி – https://ssc.gov.in/ |
| விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள் | 10 செப்டம்பர் 2026 |
| விண்ணப்பிக்கக் கடைசி நாள் | 30 செப்டம்பர் 2026, இரவு 11:00 மணி |
| அதிகாரப்பூர்வ இணையதளம் | ssc.gov.in |

விண்ணப்பிக்கும் முறை: கல்வித்தகுதி, வயது வரம்பு, விண்ணப்பக் கட்டணம் மற்றும் தேர்வு முறை உள்ளிட்ட விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிக்கையில் படித்து அறிந்த பின்னர், இணையவழியில் விண்ணப்பிக்கவும்.

# உயர்த்தப்பட்ட விலையில் 42,082 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்: தமிழக அரசு!



சென்னை, செப். 14–

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:–

நடப்பு கொள்முதல் பருவம் கே.எம்.எஸ் 2026–2027–க்கு மத்திய அரசு சன்னரக நெல் ஒரு குவிண்டால் ரூ.2,461–ம், பொது ரக நெல் ஒரு குவிண்டால் ரூ.2441/–ம் நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்பட்டு, 01.09.2026 முதல் நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கி யுள்ளது. மேலும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு நெல்லுக்கான ஊக்கத் தொகையாக சன்னரக நெல் ஒரு குவிண்டால் ரூ.156–லிருந்து ரூ.289–ஆகவும், பொதுரக நெல் ஒரு குவிண்டால் ரூ.131–லிருந்து ரூ.159–ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், நேரடி நெல் கொள்முதல் நிலைய ங்கள் மூலமாக விவசாயிகளி டமிருந்து கடந்த செப்.11 வரை தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், செங்கல்பட்டு, ஈரோடு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, தேனி மற்றும் திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் முதற்கட்டமாக 401 நேரடி நெல் கொள்முதல் நிலைய ங்கள் திறக்கப்பட்டு 7,043 விவசாயிகளிடமிருந்து 42,082 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், நெல் வரத்தின் அடிப்படையில் தேவைக்கேற்ப மாவட்ட ஆட்சியர்களின் அனுமதி பெற்று நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறந்திட முதுநிலை மண்டல மேலாளர்கள், மண்டல மேலாளர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்படும் நெல்மணிகனை இயற்கை சீற்றங்களில் இருந்து பாதுகாத்து உடனுக்குடன் சேமிப்பு கிடங்குகளுக்கு இயக்கம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமையும் நெல் கொள்முதல் செய்ய கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், செங்கல்பட்டு, ஈரோடு, திருவள்ளூர் மண்டலங்க ளுக்கு அனுமதி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்

**கைகுலுக்கினால் மட்டும் போதாது; உறவின் விரிசலும் மூடப்பட வேண்டும்!**



# விநாயகப் பெருமானின் அருளால் மகிழ்ச்சியும், வளமும் பெருகட்டும்: முதல்-அமைச்சர் விஜய் வாழ்த்து!

சென்னை, செப். 14–

விநாயகர் பெருமானின் அவதார திருநாளான விநாயகர் சதுர்த்தி இன்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு கோவில்களில் அதிகாலை முதலே பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.



இந்த நிலையில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு முதல்–அமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "விநாயகர் சதுர்த்தி திருநாளில், அனைவருக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திருநாளில் தொடங்கும் அனைத்து நற்செயல்களும் விநாயகப் பெருமானின் அருளால் இனிதே நிறைவேறி, புதிய நம்பிக்கைகள் மலர்ந்து, ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சியும், அமைதியும், வளமும் பெருகட்டும்! மக்களின் எண்ணங்கள் ஈடேறி, அனைத்து முயற்சிகளும் வெற்றியின் பாதையில் பயணிக்கட்டும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பிள்ளையார்பட்டி விநாயகர் கோயில்: அதிகாலையிலேயே குவிந்த பக்தர்கள்!

காரைக்குடி, செப். 14–

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலில் இன்று அதிகாலையிலேயே வழிபாடு நடத்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரிசையில் காத்திருந்தனர்.



சிவகங்கையில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற குடைவரைக் கோயிலான இக்கோயிலில் விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்படும். இந்தக் கோயிலில் மலையைக் குடைந்து 6 அடி உயரத்தில் விநாயகர் காட்சியளிக்கிறார்.

இக்கோயிலில் செப். 5–ல் கொடியேற்றத்துடன் தொடங்கி 10 நாள்களுக்கு விநாயகர் சதுர்த்தி விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்று சதுர்த்தியை முன்னிட்டு, அதிகாலையில் கோயில் நடைதிறக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

# உத்தர பிரதேச தேர்தலில் புதிய வியூகம்: நீல நிற ஆடை கலாச்சாரத்தை கையில் எடுத்த அகிலேஷ் யாதவ்!

உத்தரபிரதேசம், செப். 14–

கடந்த மக்களவைத் தேர்தலில் பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள் மற்றும் சிறுபான்மையினரை உள்ளடக்கிய 'பிடிஏ' என்ற முழக்கத்தின் மூலம் சமாஜ்வாதி கட்சி பெரும் வெற்றியைக் கண்டது.



உத்தர பிரதேச மாநிலத்தில் 2027–ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சமாஜ்வாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ் தீவிர அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். கட்சியின் மாணவர் அமைப்பான 'சமாஜ்வாதி சத்ர சபா' உறுப்பினர்களுக்கு நீல நிற டி–ஷர்ட் மற்றும் ஜீன்ஸ் உடைகளுடன் கூடிய புதிய சீருடையை அவர் முறைப்படி அறிமுகப்படுத்தி யுள்ளார். சிவப்புக் தொப்பியுடன் கூடிய இந்த புதிய தோற்றம், வழக்கமான சிவப்பு மற்றும் பச்சை நிற அரசியல் அடையாளத்திலிருந்து விலகி ஒரு புதிய பரிமாணத்தை உருவாக்கியுள்ளது.

நீல நிறம் என்பது இந்தியாவின் அரசியல் களத்தில் அம்பேத்கர் கொள்கைகள் மற்றும் பகுஜன் சமாஜ் இயக்கத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சியின் பிரதான நிறமாக நீலம் இருந்துவரும் நிலையில், அந்த வண்ணத்தை சமாஜ்வாதி கட்சி கையில் எடுத்திருப்பது பெரிய கவனத்தைப் பெற்றுள்ளது.

இதுகுறித்து பேசிய அகிலேஷ் யாதவ், நீல நிறம் என்பது வெறுமனே ஒரு வண்ணம் அல்ல, அது இந்திய அரசியல் சாசனம், ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை குறிக்கும் அடையாளம் என்று விளக்கம் அளித்துள்ளார். மேலும் தொழிலாளர்களின் வரலாற்றுப் போராட்டத்தை நினைவுகூரும் வகையில் ஜீன்ஸ் உடை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள் மற்றும் சிறுபான்மையினரை உள்ளடக்கிய 'பிடிஏ' என்ற முழக்கத்தின் மூலம் சமாஜ்வாதி கட்சி பெரும் வெற்றியைக் கண்டது. அதே கூட்டணியை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், மாயாவதியின் ஆதரவு தளமாக விளங்கும் தலித் இளைஞர்களைத் தன் பக்கம் ஈர்க்க அகிலேஷ் யாதவ் இந்த புதிய உத்தியைக் கையாள்கிறார். பகுஜன் கொள்கைகளைப் பேசுவதன் மூலமும் தலித் மக்களின் அடையாளங்களைப் பிரதிபலிப்பதன் மூலமும், உத்தரப் பிரதேசத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரே தலைவராக உருவெடுக்கும் முயற்சியில் அவர் தீவிரமாக களமிறங்கியுள்ளார்.

பாரம்பரியமான கதர் ஆடைகளுக்குப் பதிலாக நவீன டி–ஷர்ட் மற்றும் ஜீன்ஸ் உடைகளைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் இன்றைய Gen Z இளைஞர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த சமாஜ்வாதி கட்சி திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளில் இரு வார மாணவர் விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொள்ளவுள்ளனர். பாரதிய ஜனதா கட்சிக்கு வலுவான போட்டியைக் கொடுக்கவும், 2027 சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கவும் அகிலேஷ் யாதவ் வகுத்து வரும் இந்த புதிய வண்ண அரசியல் அம்மாநில அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் நாட்டின் முதல் டி.ஆர்.ஐ. ஆலை: மத்திய அரசு திட்டம்!

புதுடெல்லி, செப். 14–

எஃகு உற்பத்தி துறையில் கார்பன் வெளியேற்றத்தை குறைக்கும் வகையில், முழுமையாக ஹைட்ரஜனை எரிபொருளாக பயன்படுத்தி இயங்கும் நாட்டின் முதல் நேரடி குறைக்கப்பட்ட இரும்பு (Direct Reduced Iron) ஆலையை 207 கோடி ரூபாயில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் கனிமங்கள் மற்றும் பொருட்கள் தொழில்நுட்ப நிறுவனம் தலைமையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நாளொன்றுக்கு 20 டன் உற்பத்தித் திறன் கொண்ட இந்த முன்னோடித் திட்டத்திற்கு, எஃகு அமைச்சகம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ஆகியவற்றின் கொள்கை



ரீதியான ஒப்புதல் கிடைத்துள்ளது. பல சர்வதேச ஹைட்ரஜன் – டிஆர்ஐ திட்டங்கள் உயர் தர மேக்னடைட்டைப் பயன்படுத்துகின்றன. இந்தியா ஒப்பீட்டளவில் தரம் குறைந்த ஹெமடைட் தாதுக்களைப் பதப்படுத்துவது ஒரு முக்கிய சவாலாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இந்த ஆலை 2029 ஆகஸ்ட் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொழில்நுட்பம், எஃகு உற்பத்தியில் ஏற்படும் கார்பன் வெளி யேற்றத்தை கணிசமாக குறைக்க உதவும்.

## தீபாவளி ரிலீஸ்: 'மூக்குத்தி அம்மன் 2' படத்தின் டீசர் வெளியானது!



மூக்குத்தி அம்மன் படத்தின் இரண்டாம் பாகம் உருவாகி உள்ளது. முதல் பாகத்தை ஆர்.ஜே. பாலாஜி இயக்கிய நிலையில், இரண்டாம் பாகத்தை இயக்குநர் சுந்தர்.சி இயக்கியுள்ளார். இந்த படத்தில் நயன்தாரா, ரெஜினா கேசண்ட்ரா, அபிநயா, ஊர்வசி, யோகிபாபு, மைனா நந்தினி, துனியா விஜய், சிங்கம்புலி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்தை வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கணேஷ் தயாரித்துள்ளார். மேலும் குஷ்பு சுந்தர் மற்றும் விக்னேஷ் சிவன் ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர். மூக்குத்தி அம்மன் 2 படத்துக்கு ஹிப் ஹாப் தமிழா ஆதி இசையமைத்துள்ளார்.

ரூ.100 கோடிக்கும் அதிகமான பட்ஜெட்டில் உருவாகியுள்ள இந்த படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. 'ரைஸ் ஆப் மஹாச்தி' என்ற பெயரில் வெளியாகியுள்ள டீசரில் பிரமாண்டமான காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்த டீசர் படத்துக்கான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தி யுள்ளது. இந்த டீசர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. மேலும் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் மூக்குத்தி அம்மன் 2 திரைப்படம் தீபாவளியை முன்னிட்டு வருகிற நவம்பர் மாதம் 6–ந்தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு முழுவதும் 18-ம்தேதி செவிலியர்கள் போராட்டம்!

சென்னை, செப். 14–

தவெக அரசு ஒப்பந்த அடிப்படையில் 4,724 செவிலியர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பாணையை வெளியிட்டது. அதன்படி தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் இயங்கும் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்கள் தேர்வு செய்யப்படுவர். அதன்படி, ஒப்பந்தம் மற்றும் தற்காலிக செவிலியர் பணிக்கு மொத்தம் 4,724 காலிப் பணியிடங்கள் உள்ளது. இதற்கு விண்ணப்பிப்பவர்கள் அதிகபட்சம் 50 வயதுக்குள் இருக்க வேண்டும். செவிலியர் பட்டயப் படிப்பான ஜிஎன்எம் அல்லது இளங்கலை செவிலியர் படிப்பான பி.எஸ்சி நர்சிங் முடித்திருக்க வேண்டும், அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் செவிலியர் கல்வி பயின்றிருக்க வேண்டும் என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



https://nhm.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து வரும் 25ம் தேதி மாலை 5 மணிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட நலவாழ்வு சங்க அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள திருப்பூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை தவிர்த்து, பிற மாவட்டங்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தும் என்று மாநில நலவாழ்வு சங்கம் அறிவிப்பு வெளியிட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு, பணியமர்த்தப்படும் ஊழியர்களின் நலனையும் பொதுமக்களின் நலனையும் கருத்தில் கொண்டு இந்த முடிவை கைவிடுவதுடன், மருத்துவத்துறை தொடர்ந்து நிரந்தர தன்மையுடன் இயங்க அனைத்துப் பணியாளர்களையும் நிரந்தர தன்மையுடன் பணியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தற்காலிக பணிநியமனத்தை கைவிட கோரி அனைத்து மாவட்டங்களிலும் வரும் 18ம் தேதி மாபெரும் போராட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் அறிவித்துள்ளது.

## தங்கம் விலை சற்று குறைவு!



சென்னை, செப். 14–

தங்கம் விலை சற்று குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.360 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,13,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.45 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,125–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் இன்று மாற்றமில்லை. வெள்ளி ஒரு கிராம் ரூ.250–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.






# மதுரை மீனாட்சி கோயில் கும்பாபிஷேகம் மண்டல பூஜை வரை இலவச தரிசனமா?




**மதுரை, செப். 14 –**

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் செப். 17-ல் நடைபெறுவதை முன்னிட்டு, செப். 20 வரை பக்தர்கள் இலவச தரிசனத்திற்கு அனுமதிக்கப்படும் நிலையில், மண்டல பூஜை வரையும் இச்சலுகையை அளிக்க அறநிலையத்துறை திட்டமிட்டுள்ளது.

**17 ஆண்டுகளுக்குப் பிறகு கும்பாபிஷேகம்**

இக்கோயில் கும்பாபிஷேகம் 17 ஆண்டுகளுக்குப் பிறகு செப். 17-ல் நடைபெறுகிறது. லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பு ஏற்பாடுகளைக் செய்ய நியமிக்கப்பட்டுள்ள 3 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நாளை முதல் பணிகளை ஆரம்பிக்கின்றனர்.

**7 வண்ண 'பாஸ்' – 5 ஆயிரம் பேருக்கு**

முன்னதாக, கும்பாபிஷேகத்தைக் காண 7 வண்ண 'பாஸ்'கள் வழங்கும் பணி துவங்க உள்ளது. உபயதாரர்கள், கட்டளைதாரர்கள், நீதிபதிகள் என 5 ஆயிரம் பேருக்கு 'பாஸ்' வழங்கப்பட உள்ளது. பொதுமக்கள் 2 ஆயிரம் பேர் அனுமதிக்கப்பட உள்ளனர். இதற்காக ஆன்லைனில் 13 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

**செப். 17 முதல் 20 வரை இலவச தரிசனம்**

இதற்கிடையே கும்பாபிஷேகத்திற்குப் பிறகு அம்மனையும், சுவாமிகளையும் தரிசிக்க பக்தர்கள் கூட்டம் அதிகரிக்கும் என்பதால், செப். 17 முதல் 20 வரை இலவச தரிசனம் என அறநிலையத்துறை அறிவித்துள்ளது.

**மண்டல பூஜை – அக். 2 வரை?**

அதேநேரம், செப். 18 முதல் அக். 2 வரை மண்டல பூஜை நடைபெறுகிறது. இதையும் காண பக்தர்கள் அதிகளவில் வருவார்கள். அப்போது கூட்ட நெரிசலைத் தவிர்க்க அக். 2 வரை இலவச தரிசனத்திற்கு அனுமதிக்கலாமா என அறநிலையத்துறை ஆலோசித்து வருகிறது. இலவச தரிசனத்திற்கு அனுமதிக்க வேண்டும் என இந்து வழக்கறிஞர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் **சுந்தரவடிவேல்** வலியுறுத்தியுள்ளார்.

**பக்தர்களுக்கு மெகா விருந்து**

கும்பாபிஷேகத்தையொட்டி செப். 17 காலை முதல் மதுரை சேதுபதி மேல்நிலைப்பள்ளியில் தனியார் டிரஸ்ட் சார்பில் மெகா விருந்து பக்தர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020